# மட்டக்களப்பு ஈச்சந்தீவு கண்ணகி அம்மன் ஆலயத்தில் இடம் பெற்ற கோவலன் சரித்திரம் வடமோடிக் கூத்தும் அதில் பெண்களின் பங்குபற்றுகையும் - ஓர் ஆய்வு

**சு.சந்திரகுமார்,**

நுண்கலைத்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை,
வந்தாறுமூலை.
srckumar20@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**
பாரம்பரியக் கூத்தரங்கு சமுதாயம் தழுவிய மக்கள் அரங்காகும். இன்றைய உலகமயமாக்கற் சூழலில் தனியன்களாக்கப்படும் மனிதரை ஒன்றுகூட்டி வாழ்ந்து கொண்டாட வைக்கும் சாதனமாக இது உள்ளது. கூத்து சமுதாயத்தையும் சமுதாயம் கூத்தையும் தாக்கம் செலுத்தும் தன்மை கொண்டது. கூத்தாற்றுகைகளில் பெண் பாத்திரங்களை ஆண்களே தாங்கி ஆடுகின்றனர். பெண்களுக்குரிய இடம் ஆற்றுகையில் இல்லை. கூத்தாட விரும்பினாலும் ஆண்களால் அனுமதிக்கப்படுவதில்லை. ''உடலில் பலம் இல்லை. மாதவிலக்குக் காலங்களில் ஆடுவது கஷ்டம், கோயிலில் அரங்கேற்றுவதால் அக்காலத்தில் உட்செல்ல முடியாது. அவர்களைக் கஷ்டப்படுத்தக் கூடாது'' என்பன கூத்தரங்கச் சூழலில் கூத்தர்களாலும் அண்ணாவிமாராலும் கட்டமைக்கப்பட்ட கூற்றுக்களாகும். கூத்தரங்கில் பெண்களின் பங்களிப்பு பல வழிகளில் நிலவுகின்றன. கூத்து முழுமை பெற பெரும் பங்கு வகிப்பவர்கள் பெண்களாவர். கூத்தருக்கு உணவு சமைத்தல், கூத்தாடும்போது வீட்டு நிருவாகத்தைக் கண்காணித்தல், உடுப்புக் கழுவுதல், பழகும் காலங்களில் கூத்தைப் பார்த்து அபிப்பிராயம் கூறுதல், கூத்தாடுவதைப் பரவலாக்குதல், நன்றாக ஆடும் கூத்தருக்குப் பட்டம் சூட்டல், பாட்டு மறந்த கூத்தருக்கு அதனை சொல்லிக் கொடுத்தல், வீட்டிற்கு வந்து ஆடிக்காட்டுதல், ஆடிப்பார்த்தல் என்பன திரைமறைவில் கூத்துச் செயற்பாட்டின்போது பெண்களால் இடம்பெறுகின்றன. சில பெண்கள் அண்ணாவியாராகவும் செயற்பட்டுள்ளனர். எனினும், பெண்கள் கூத்தாட விரும்பினாலும் ஆற்றுகையில் சேர்த்துக் கொள்ளப்படுவதும் இல்லை. அனுமதிக்கப்படுவதும் இல்லை. குறிப்பாக, கூத்தாடுதல், கொப்பி பார்த்தல், பிற்பாட்டுப்பாடுதல், அண்ணாவியாகச் செயற்படல் ஆகியவற்றில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. அவ்வாறே, ஊர் அம்மன் கோயிற் சடங்குகளில் பொருத்தமில்லாத பாரத, இராமாயணக் கதைகளே கூத்தாக எழுதப்பட்டு, ஆடப்படுவது அதிகமாக உள்ளது. எனினும், சமகாலத்திற்கும் பொருந்தக் கூடிய கதைகளைக் கொண்ட அலங்காரரூபன், நொண்டி நாடகம், வீரகுமாரன் நாடகம் போன்ற கூத்துக்களும் ஆடப்படுகின்றன. ஆனால், 1995இல் ஈச்சந்தீவு எனும் கிராமத்தில் உள்ள கண்ணகி அம்மன் கோயில் சடங்கிற்காக அக்கோயிற் கண்ணகி அம்மனுடன் தொடர்புபட்ட கதையினைக் கொண்டு ''கோவலன் சரித்திரம்'' எனும் பெயரில் வடமோடிக் கூத்து ஒன்று எழுதப்பட்டு ஆடப்பட்டுள்ளது. இக்கூத்தில் பெண்களே ''பெண் கூத்தினைத்'' தாங்கி ஆடிப் புகழ் பெற்றுள்ளனர். இது பாரம்பரியக் கூத்தரங்க வரலாற்றில் முக்கிய போக்காகும். இது பற்றியதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

**Keywords:** கூத்தரங்கு, பெண்களைச் சேர்த்துக்கொள்ளுதல், சமஸ்கிருதமயமாக்கம், மதிநுட்பம், அண்ணாவியார்.

**ஆய்வுப் பிரச்சினை:-** பாரம்பரியக் கூத்தரங்கின் நிகழ்த்துகையில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனரா? என்பதாகும்.

**ஆய்வின் நோக்கம்:-** கூத்தில் பெண்களைச் சேர்த்துக் கொண்டமையையும் அம்மன் கோயிலுக்குப் பொருத்தமான கதையினைக் கொண்டு எழுதி ஆடியமையை வெளிக்கொணர்தல்.

**தகவல் சேகரிப்பு:-** முதனிலைத் தரவு – கள ஆய்வு, நேர்காணல், குழுநிலைக் கலந்துரையாடல், பங்குகொள்ளல் என்பவற்றின் மூலமும், இரண்டாம் நிலைத் தரவு - இது தொடர்பாக வந்த புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பவற்றிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன.

## கண்டுபிடிப்பும் தரவுகளை வியாக்கியானித்தலும்

கூத்தரங்கின் தொடர் செயற்பாட்டில் பெண்களின் பங்களிப்பு பல வழிகளில் நிலவுகின்றது. ஆனாலும், ஆற்றுகை நிலையில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவதில்லை. பெண்கள் கூத்தாட விரும்பினாலும் ஆண்களாலும், ஏனையோராலும் பண்பாட்டுக் கட்டுருவாக்கத்தாலும் அனுமதிக்கப்படுவதில்லை. இது பற்றி கூத்தர்கள் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம். ''பொம்புளயல் தொடர்ந்து கூத்தாடமாட்டார்கள். உடம்பு கஷ்டமாக இருக்கும்'' (நேர்காணல்) என வே.தம்பிமுத்து அண்ணாவியாரும் ''கோயிலிலதானே கூத்துப் போடுற பொம்பிளயலுக்கு தொடக்குத்தானே (தீட்டு) இதால கூத்தாடக் கஷ்டம்'' (நேர்காணல்) என பரமக்குட்டி

அண்ணாவியாரும் ''அவர்களைக் கஷ்டப்படுத்தக் கூடாது. அவங்கலாள ஏலாது'' (நேர்காணல்) என கூத்தர் சுந்தரலிங்கமும் கூறுவதன் மூலம் பெண்கள் கூத்தாட அனுமதிக்கப்படாத நிலைப்பாடே பாரம்பரியக் கூத்தரங்கச் சூழலில் நிலவுகின்றமை புலனாகின்றது.

விளையாட்டுத்துறைகளிலும் இராணுவப் பயிற்சிகளிலும் பெண்கள் மிகத் திறமையாக ஈடுபடுகின்றமை அறிதலுக்குரியது. பிரசவ வலியைத் தாங்கும் பெண்களால் கூத்தாடுவதற்கான உடல் நிலையும் பலமும் ஒரு பொருட்டல்ல. எனினும், கூத்தில் பெண் பாத்திரங்களை ஆண்களே தாங்கி ஆடுகின்றமையே நிலவுகின்றது. ''தீட்டு'' எனக் கூறி பெண்கள் கோயிலுக்குள் செல்லக்கூடாது எனக் கட்டமைத்திருப்பது சமஸ்கிருதமயமாக்கலின் ஆதிக்க அதிகாரமேயாகும். இந்த நிலையிலேயே இளம் பெண்களைக் கொண்டு கூத்து ஆடப்பட்டுள்ளது.

இது, 1995 இல் மட்டக்களப்பு ஈச்சந்தீவு கண்ணகி அம்மன் கோயிலில் சிலப்பதிகாரத்திலுள்ள கண்ணகி வரலாற்றைக் கொண்டு க.மயில்வாகனம் அவர்களால் ''கோவலன் சரித்திரம்'' எனும் வடமோடிக் கூத்து எழுதப்பட்டு பெண்கள், ஆண்கள் இருபாலாரையும் சேர்த்து ஆடப்பட்டுள்ளது. ஊர்கோயில் அம்மனின் வரலாற்றுக் கதையுடன் தொடர்புபட்டதாகவும் உள்ளது. அம்மனின் வரலாறு, தெய்வமாகியமை, அதன் பண்பாட்டுப் பின்னணி, மக்கள் மத்தியில் பக்தி நிலையை உருவாக்குதல் எனும் நோக்கத்திற்காக ஆடப்பட்டுள்ளது. கண்ணகி அம்மன் கோயிலுக்குப் பொருத்தமான கதையைக் கொண்டு கூத்தெழுதி ஆடியமையானது கூத்து சமுதாயத்தின் ஊடாட்டத்தையும், இணைவையும் அதிகம் ஏற்படுத்தியுள்ளது. சாதி ஆதிக்கம், சமஸ்கிருதமயமாக்கம், உள்ளூர்த் தெய்வங்களுக்குப் பொருத்தமில்லாத வரலாறு என்பவற்றை வலுப்படுத்துவதாகவே பாரம்பரியக் கூத்தின் பயில்களம் பெருவாரியாகக் காணப்படுகின்றது. இதற்கு மாறான செயற்பாடாகவும் இது அமைந்துள்ளது. இக்கூத்து, மட்டக்களப்பிலும் பிற மாவட்டங்களிலும் சுமார் 25 தடவை களரியேற்றப்பட்டுள்ளது.

இக்கூத்தில் ஆண்களையும் பெண்களையும் இணைத்து ஆடவைத்துள்ளமை பக்தியை ஏற்படுத்துவதற்கே தவிர பெண்களும் ஆடவேண்டும் என்பதற்காக அல்ல என்பது புலனாகின்றது. இதில் பெண்கள் ஆடியமையால் ஆடுதல், பாடுதல், கொப்பி பார்த்தல், நடித்தல் என்பவற்றின் ஆற்றலும் திறனும் வெளிப்பட்டுள்ளன. ஆனால், பெண்ணிலைவாதம்சார் கதையாக இருந்திருப்பின் கூத்தாடிய பெண்களின் ஆளுமைகள் மேலும் வலுப்பெற்றிருக்கும். பெண்களது மதிநுட்பம், சுயமாகச் செயற்படுதல், ஆதிக்கத்திற்கு எதிராகக் கேள்வி கேட்டல் என்பன தொடர்பான ஆளுமைகளைத் தரக் கூடியதாக இருந்திருக்கும். 2013இல் பெண்களும் சேர்ந்து ஆடிய ''மழைப்பழம் சிறுவர் கூத்து'' பெண்ணின் மதி நுட்பத்தையும், எதையும் சாதிக்கும் திறனையும் ஆளுமையினையும் கருவாகக் கொண்ட கூத்தாகும். இதில் ஆடிய பெண்களுக்கு அது படிப்பினையாக அமைகின்றது.

கோயிலுக்குப் பொருத்தமான கதையினைக் கொண்டு கூத்து எழுதி ஆடப்பட்டிருந்தாலும் கண்ணகி தொடர்பான, ஊர் வரலாற்றுடன் தொர்புபட்ட கதைகள், பாடல்கள், காவியங்கள், வழக்காறுகள், ஊர்மக்கள், செவிவழிக்கதைகள் என்பவற்றைக் கொண்டு எழுதப்பட்டிருப்பின் சிறப்பாக அமைந்திருக்கும். எனினும் ''கோவலன் சரித்திரம்'' எனும் பெயரில் சிலப்பதிகாரத்தில் கூறப்படும் கண்ணகி வரலாற்றைக் கொண்டு அம்மன் கோயிலுக்குப் பொருத்தமாக எழுதி பெண்களைச் சேர்த்து ஆடி மகிழ்ந்துள்ளமை கூத்தரங்க வரலாற்றில் முக்கியமான திருப்புமுனையாகும்.
2002இல் நடைபெற்ற கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டிலும் 2012களின் பின்னரான கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் கூத்துப் பற்றிய கற்றல் - கற்பித்தல் வெளியிலும் சமகால சமுதாயத்திற்கு ஏற்ப கதைகளை உருவாக்கியும் முன்னர் எழுதப்பட்ட சமகாலத்திற்குப் பொருத்தமான கூத்துக்களைத் தெரிவு செய்தும் பெண்களும், ஆண்களும் ஆடி வருகின்ற போக்கும் உள்ளது. 2013, 2015 களில் முறையே கண்டியரசன், அலங்காரரூபன் ஆகிய தென்மோடிக் கூத்துக்கள் பல்கலைக்கழகத்திலும் ஊரிலும் ஆடப்பட்டன. இதில் பெண்கள் ஆடிப் பெயர் பெற்றதோடு, நிருவாக வேலைகளிலும் ஈடுபட்டமை முக்கிய பதிவாகும். சமகாலத்தில் இதன் போக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வாளரே இக்கூத்துப் பழகி அரங்கேறி, மீள் களரியேறும் வரைக்கும் பொறுப்பாசிரியராக இருந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

ஈழத்துப் பாரம்பரியக் கூத்தரங்கு சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் கூத்தாடுவதற்குப் பெண்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. ஆனால், 1995இல் ''கோவலன் சரித்திரம்'' எனும் கூத்தில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு கூத்தாடப்பட்டுள்ளமையானது முக்கிய பதிவாகும். அத்தோடு, அக்கோயிலுக்குப் பொருத்தமான கதையைக் கொண்டு ஆடப்பட்டுள்ளது. ஆனால், பெண்களின் ஆளுமைகளை மேலும் வலுப்படுத்துவதற்கான

கதையினைக் கொண்டு 2002களின் பின் கூத்தாடப்படும் போக்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. தற்காலத்தில் திறந்த வெளியில் கற்றல் - கற்பித்தல் நடைபெறும் சூழலில் ஆடப்படும் கூத்துக்களில் பெண்கள் கூத்தாடுகின்றமையும் அறிதலுக்குரியதாகும்.

**அடிக்குறிப்புக்கள்**


முத்தையா, இ. (2010), தமிழர் பண்பாட்டு வெளியில் நிகழ்த்துகலைகளும் உலக நோக்கும். காவ்யா: சென்னை.

முத்தையா, இ. (2012), பண்பாட்டுச் சொல்லாடலில் காட்டுமிராண்டித்தனமும் நாகரிகமும். நியுசெஞ்சரி புக்கவுஸ்: சென்னை.

ஜெயசங்கர், சி. (2006), கூத்து மீளுருவாக்கம், *மூன்றாவது கண்* - உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக் குழு: வாடிவீட்டுத் தொகுதி, மட்டக்களப்பு.

ஜெயசங்கர், சி. (2012), ‘‘புலப்பட்டும் புலப்படாமலும் விரிந்துவருகின்ற போர்வெளிகளில் பயணிக்கும் ஈழத்துக் கூத்தர்’’– *ஞானம் - கலை இலக்கியச் சஞ்சிகை.*

*மூன்றாவது கண்.* (2011), - *மடல் -08,* உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக் குழு: வாடிவீட்டுத் தொகுதி, மட்டக்களப்பு.

ஜெயசங்கர், சி. (2014), ‘‘கூத்தரங்கின் உருவ உள்ளடக்கங்களும் நவீன அறிவுப்புலத் தேடலும்’’ *ஜீவநதி, இதழ் 55.*

ஜெயசங்கர், சி. (2013), ‘‘தமிழ் நாட்டின் பெண் பாத்திரங்களும் கூத்தரும்’’.


**தகவல் தந்தோர்**

கள ஆய்வின்போது நேர்கண்டோர் பெயர், வயது, தொழில், திகதி, வதிவிடம் எனும் நிரலில் தரப்பட்டுள்ளது.

க. மயில்வாகனம், 84, முறிவுவைத்தியர் - கமம், 28.02.2014, நாவற்காடு.
திருமதி கு. சந்திரமலர், 54, வீட்டுவேலை, 08.03.2014, நாவற்காடு.
திருமதி சி. சந்திரகலா, 33, வீட்டுவேலை, 08.03.2014, நாவற்காடு.
திருமதி மே. சந்திரவதனி, 30,வீட்டுவேலை, 08.03.2014, நாவற்காடு.
திருமதி தி. நியுசலா, 29, வீட்டுவேலை, 09.04.2014, நெல்லிச்சேனை.
திருமதி செ. இதயராணி, 30, தையல், 09.04.2014, நெல்லிச்சேனை.
திருமதி க. இந்துமதி, 32, வீட்டுவேலை, 09.04.2014, நெல்லிச்சேனை.
திருமதி க. தவமணி, 65, வீட்டுவேலை, 09.04.2014, நெல்லிச்சேனை.
திரு தெ. ரவிக்குமார், 36, கமம், 09.04.2014, நெல்லிச்சேனை.
திரு செ. முத்திலிங்கம், 67, கமம், 09.04.2014, நெல்லிச்சேனை.
திருமதி க. லலிதா, 29, வீட்டுவேலை, 16.04.204, வந்தாறுமூலை.
திரு வே. தம்பிமுத்து, 55, அண்ணாவியார், 10.04.2014, சித்தாண்டி.
திரு வெ. பரமக்குட்டி, 69, கமம், அண்ணாவி, 10.07.2014இ கன்னங்குடா.
திரு க. சுந்தரலிங்கம், 49, கமம், கூத்தர், 12.07.2014. படையாண்டவெளி.